

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.6.2025) கலைஞர் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் "தமிழோடு விளையாடு" என்ற நிகழ்ச்சியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு விருதுகள் மற்றும் பரிசு தொகைக்கான காசோலைகளை வழங்கினார். உடன் "தமிழோடு விளையாடு" நிகழ்ச்சித் தொகுப்பாளர் இசையமைப்பாளர் ஜேம்ஸ் வசந்தன் உள்ளார்.

### தேனி மாவட்டத்தில்

# 851 பயனாளிகளுக்கு ரூ.13.49 கோடியில் நலத்திட்ட உதவிகள்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

தேனி, ஜுன் 18-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தேனி மாவட்டத்தில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் 851 பயனாளிகளுக்கு மொத்தம் 13.49 கோடி ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (16.6.2025) தேனி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்தில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் 851 பயனாளிகளுக்கு மொத்தம் 13.49 கோடி ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் 578 பயனாளிகளுக்கு 2.96 கோடி ரூபாய் மதிப்பிலான வீட்டுமனை பட்டாக்கள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளையும், முதலமைச்சர் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 2 பயனாளிகளுக்கு திருமண உதவித் தொகை காசோலைகள், 24 நபர்களின் குடும்பத்தினருக்கு இயற்கை மரண உதவித் தொகை காசோலைகள், விபத்துகளில் உயிரிழந்த 4 நபர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.1 லட்சம் உதவித் தொகைக்கான காசோலைகள், மாவட்ட ஆட்சியரின் விருப்புரிமை நிதியின் கீழ் 3 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.

மேலும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் 8 நபர்களுக்கு கலைஞர் கனவு இல்லம் கட்டுவதற்கான ஆணைகள், 4 பயனாளிகளுக்கு ஊரக வீடுகள் பராமரிப்புத் திட்டத்தின் கீழ் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கான ஆணைகள், 8 நபர்களுக்கு முதலமைச்சரின் வீடுகள் மறுகட்டுமானத் திட்டத்தின் கீழ் ஆணைகள், 71 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 8.02 கோடி ரூபாய்க்கான வங்கிக் கடன் இணைப்புகளையும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

தொடர்ந்து 20 மாற்றுத் திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள், 40 வயதிற்கு மேற்பட்ட 2 திருநங்கைகளுக்கு ஓய்வூதிய திட்ட ஆணைகள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் 4 பயனாளிகளுக்கு விலையில்லா தையல் இயந்திரங்கள், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் மொத்தம் 35 பயனாளிகளுக்கு விலையில்லா தையல் இயந்திரம், தேய்ப்பு பெட்டி உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள், கூட்டுறவுத்துறையின் சார்பில் 5 பயனாளிகளுக்கு கடனுதவிகள், தொழிலாளர் நலத்துறையின் சார்பில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களுக்கான வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் 34 பயனாளிகளுக்கு ஆணைகளையும் துணை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் துறை, பொது சுகாதாரத் துறை, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை என பல்வேறு அரசுத்துறைகளின் சார்பில் மொத்தம் 851 பயனாளிகளுக்கு மொத்தம் 13,48,87,356 ரூபாய்க்கான அரசு நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச் செல்வன், சட்டமன்ற உறுப்பினர்கள் என். இராமகிருஷ்ணன், ஆ.மகாராஜன், கே.எஸ்.சரவணக்குமார், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், கூடுதல் செயலாளர் திருமதி ஆர்.வி.ஷஜீவனா, மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், உள்பட பல்வேறு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தேனி மாவட்டம் – பெரியகுளம் வட்டம்

# கீழவடகரை ஊராட்சியில் 46 பழங்குடியின மக்களுக்கு வீட்டு மனைப்பட்டா!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

தேனி, ஜுன் 18-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம் கீழவடகரை ஊராட்சியைச் சேர்ந்த செல்லாங்குடியிருப்பில் வசிக்கும் 46 பழங்குடியின மக்களுக்கு வீட்டு மனைப் பட்டா மற்றும் கலைஞர் வீடுகட்டும் திட்டத்தின் கீழ் வீடு கட்டுவதற்கான ஆணைகளை வழங்கினார்.

தேனி மாவட்டம், மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள கொட்டக்குடி, அகமலை, சிறைக்காடு, சொக்கனலை உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட கிராமங்களில் பழங்குடியின குடும்பங்கள் வசித்து வருகின்றனர்.

பழங்குடியினரின் கல்வி, சுகாதாரம், பொருளாதாரம், ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்கில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசின் சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.


பெரியகுளம் வட்டம், செல்லாங்குடியிருப்பில் வசித்து வரும் பழங்குடியினர் மக்களின் கோரிக்கையினை ஏற்று கரடி பொட்டல் பகுதியில் இடஒதுக்கீடு செய்யப்பட்டு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதனடிப்படையில் இன்றைய தினம், துணை முதலமைச்சர் அவர்கள் 46 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப்பட்டாக்களை அவர்களின் வசிப்பிடத்திற்கே நேரில் சென்று வழங்கினார். மேலும் அவர்களுக்கு கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் தலா ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டில் வீடு கட்டுவதற்கான ஆணைகளையும் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து ஆண்டிப்பட்டி, தொப்பம்பட்டி பகுதியைச் சேர்ந்த 10 திருநங்கைகளைக் கொண்ட தாய்க்காவியா கலைக்குழுவினருக்கு 1.24 லட்சம் ரூபாய் மதிப்பிலான சலங்கை, மயில், கரகம், டிரம்ஸ், பறை ஆகிய கலைநிகழ்ச்சிகளுக்கான பொருட்கள் மற்றும் இசைக் கருவிகளை தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் 3 நபர்களுக்கு தையல் இயந்திரங்களையும், ஒரு மகளிர் சுய உதவிக்குழுவிற்கு சமுதாய முதலீட்டு நிதியாக 1 லட்சம் ரூபாய்க்கான காசோலையையும், 23 நபர்களுக்கு முதலமைச்சர் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்ட அட்டைகளையும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்இ.பெரியசாமி, நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச் செல்வன், சட்டமன்ற உறுப்பினர்கள் என். இராமகிருஷ்ணன், ஆ.மகாராஜன், கே.எஸ்.சரவணக்குமார், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், கூடுதல் செயலாளர் திருமதி ஆர்.வி.ஷஜீவனா, மாவட்ட ஆட்சித் தலைவர் ரஞ்ஜீத்சிங், உள்பட பல்வேறு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (17.06.2025) சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை கூட்டரங்கில், உலக குருதி கொடையாளர் தினம் 2025 நிகழ்ச்சியில், 2025–26 மானியக்கோரிக்கை அறிவிப்பின்படி, எச்ஐவி/எய்ட்ஸ் தொற்றுக்குள்ளான மற்றும் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான மாதாந்திர நிதி உதவித்தொகை திட்டத்தினை தொடங்கி வைத்து உரையாற்றினார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், ., தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு.அருண் தம்புராஜ், தமிழ்நாடு மாநில குருதி பரிமாற்று குழுமம் திட்ட இயக்குநர் மற்றும் உறுப்பினர் செயலர் திருமதி.ஆர்.சீத்தாலட்சுமி, , பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மருத்துவக்கல்வி மற்றும் ஆராயச்சி இயக்குநர் உயரலுவலர்கள் கலந்து கொண்டனர். மரு.செல்வவிநாயகம், மரு. சங்குமணி மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

